64

உ



அராலி தெற்கு

# விஸ்வகுலபதி ஸ்ரீ ஞானபைரவரின் ஆலய வரலாறும் திருவூஞ்சல் பாமாலையும்

27-09-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம


# அராலி தெற்கு
# விஸ்வகுலபதி ஸ்ரீ ஞானபைரவரின்
# ஆலய வரலாறும்
# திருவூஞ்சல் பாமாலையும்




## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூடும் - செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச்செய்தி

பல ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டதும் சிற்ப வல்லுனர்களை உருவாக்கியதுமான அராலிக் கிராமத்தின் தென்பகுதியில் விஷ்வப்பிரம்மகுல மக்களின் பாரம்பரிய இஷ்டதெய்வமாக விளங்குகின்ற விஷ்வகுல ஞானவைரவப் பெருமானுடைய அரை நூற்றாண்டுக்கு மேலாகிய புராதன ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து புனராவர்த்தன பிரதிஷ்டை செய்யப்பெற்று திருக்குட முழுக்கு நடைபெற்று அதன் மண்டல பூர்த்தியாகிய இன்றைய நன்னாளில் "ஆலய வரலாறும் திருவூஞ்சலும்" என்ற மலர் மலர்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

இத்தெய்வீகத் திருப்பணியை நடாத்துகின்ற சின்னப்பு பவளக் கொடி குடும்பத்தினரும் அவர்கள் சார்ந்த விஷ்வப்பிரம்மகுல மக்களும் என்றும் வைரவப் பெருமானுடைய திருவருள் கிடைக்கப் பெற்றவர்கள். இத்தெய்வீகப் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் விஷ்வகுல ஞானவைரவப் பெருமானின் திருவருட்கடாட்சம் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**தியாக. சர்வேஸ்வரக் குருக்கள்,**
**பிரதிஷ்டா பிரதமகுரு,**
**விஷ்வகுல ஞானபைரவர் தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

அராலிப் பகுதியில் வாழும் விஸ்வகுல மக்கள் மத்தியில் வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கும் வைரவப் பெருமானுக்கு புத்தொளியும் வனப்பும் மிக்க அழகான கம்பீரமான ஆலயம் அமைத்து மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று 12 நாட்கள் மண்டலாபிஷேகமும் நிறைவுற்று இன்று சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. இவ்வேளையில் "ஆலய வரலாறும் திருவூஞ்சலும்" என்னும் சிறப்பு மலர் வெளியிடப்படுவது குறித்து மிகவும் மகிழ்வடைகின்றேன். இதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மனநிறைவடைகின்றேன்.

நல்லியல்புகளும், தர்மமும் நலிவடைந்து அறியாமையாகிய இருள் கவ்வி வரும் நாட்களில் மீண்டும் புத்தொளியும் புதுவாழ்வும் பெற வைரவப் பெருமானை வணங்க வேண்டியது அவசியமாகும். எனவே நாமும் விஸ்வகுல ஸ்ரீ ஞான வைரவப் பெருமானை வேண்டி வீரம், ஞானம், தைரியம் போன்ற பாக்கியங்களைப் பெற்று சிறப்புடன் வாழ்வோமாக என்றும் வைரவ சுவாமியின் அருளினால் எல்லா மக்களும் இன்பமாக வாழ வாழ்த்துகின்றேன்.

வெஞ்சினப் பரியழல் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆலமாமெனச்
செஞ்சுடன் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்கள் ஏத்துவாம்.

**இ.சோதிநாதன்,**
**பிரதேச செயலர்,**
**வலிகாமம் மேற்கு,**
**சங்கானை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எம்பெருமானின் அருட்காட்சி எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் பிரார்த்திப்போமாக.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது மூதுரை. ஆலயம் இல்லாத ஊர் அடவிகாடே என அருளாளர் சொல்லிப் போந்தார். இத்தகைய கோட்பாட்டில் வளர்ந்ததே நமது கலா சாரம் ஆகும். ஆதலால் ஆலயத்திற்குப் பணி செய்தற்கரிய திருப்பணியாகும். தாம் மூன்று தலைமுறைக்கு மேலாகப் பூசித்து வந்த வைரவப் பெருமானுக்கு இன்று புதிய ஆலயம் எடுத்து மகா கும்பாபிஷேகம் நடாத்தியுள்ளமை போற்றத்தக்கது. அமரத்துவம் அடைந்த சின்னப்பு பவளக்கொடி வழிவந்தோர் இப்பணியைச் சிறப்பாக ஒப்பேற்றி இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இதனால் பலருக்கும் வைரவப் பெருமானை வழிபட்டு நற்பேறு அடைவதற் கான வாய்ப்பும் கிடைத்துள்ளது.

ஏன் நமது ஆலயங்களில் நடைபெறும் பூசைகளின் முடிவில் கூட சகல மக்களும் சுகத்துடன் வாழ வேண்டும் என்ற பிரார்த்தனை உண்டு. ஆலயங்களைக் கட்டினால் போதாது. அவற்றை எதுவித குறையுமின்றிப் பரிபாலிப்பது மிக மிக முக்கியம். நித்திய பூசைகள் சிறப்பாக எதுவித குறைகளும் இன்றி நடைபெற்றால் தான் என்ன நோக்கத்திற்காக ஆலயம் அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறும்.

ஆதலால் எம்பெருமானின் கருணையினால் ஆலயம் சிறக்க வேண்டும். இதனை அண்டியுள்ள மக்களும் எதுவித குறைகளு மின்றி எம்பெருமானைப் பூசித்து நற்பேறு அடைய வேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும்.

**பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்,**
**அராலி.**
**வாழ்நாள் பேராசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தின் அராலிக் கிராமத்தின் தென் பகுதியில் விஸ்வப் பிரம்மகுல மக்கள் மத்தியில் வீற்றிருந்து காத்தருள் புரிகின்ற விஸ்வகுல ஸ்ரீஞானவைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று சங்காபிஷேகம் நடைபெறும் இவ் வேளையில் கும்பாபிஷேக சிறப்பு மலராக வெளியிடப்படும் "ஆலய வரலாறும் திருவூஞ்சலும்" என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமான் கடாட்சம் பெற்றுப் பெருவாழ்வு வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

**வி.கயிலாசபிள்ளை,**
**அறங்காவலர் சபைத் தலைவர்,**
**திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை,**
**அகில இலங்கை இந்து மாமன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம

# அராலி தெற்கு விஸ்வகுல ஸ்ரீ ஞான வைரவப் பெருமானின் ஆலய வரலாறு

"சுவாநத் வஜாய வித்மகே
சூல ஹஸ்தாய தீமஹி
தன் நோ வைரவப் ப்ரசோதயாத்"

என்பது வைரவப் பெருமானின் பேரருளைப் பெறுவதற்கு வழிகாட்டும் காயத்திரி மந்திரமாகும். வெண் திங்கள் புனைந்த செஞ்சடையும், அரவணிந்த அங்கமும், புரமெரித்த முறுவலுமுடைய சிவபெருமான் ஆணவத்தை அடக்கி, துஷ்டரை நிக்கிரகம் செய்து அடியாரக்கு அனுக்கிரகம் செய்ய எடுத்த திருமூர்த்தங்களுள் வைரவப் பெருமானும் ஒருவராவார். அந்த வகையில் அராலி தெற்கு விஸ்வகுல மத்தியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ ஞான வைரவப் பெருமானின் ஆலய வரலாற்றினை நோக்குவோம்.

நம் முன்னோர் வாய்மொழியாகவும் நாம் அறிந்த அளவிலும் இந்த முயற்சியை எடுக்க முனைகின்றேன். குறை குற்றங்களை மன்னிக்குமாறு வேண்டித் தொடருகின்றேன். ஆரம்பத்தில் வைரவப்பெருமான் வீற்றிருந்த திருக்கோவில் மேற்கு முகமாக "ப" வடிவமுடைய கூரையற்ற ஒன்றாக இருந்தது. அருகில் விசாலமான ஒரு பூவரச மரம். அதன் பந்தர் போன்ற கொப்புகள் இலை குழைகளாலான கூரையின் கீழ், இரும்பினாலான ஒரு சூலமாக எம் பெருமான் வீற்றிருந்தார். அவருக்கு தைப்பொங்கல், வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு ஆகிய விஷேட தினங்களில் அயலவர்கள் பொங்கல் செய்து, வடை மாலை போட்டு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து படையல் செய்து வந்தனர். அந்த நாட்களில் இத் தெய்வம் பக்கங்களில் உலாவி வருவதாகவும் தனக்கு ஆராத்னை செய்யாத போது அயலவர்களுக்கு இரவில் மண் கொட்டித் துன்பம் செய்தார் எனவும் நம் மூதாதையர்கள் கூறியுள்ளார்கள். அருகில் குடியிருந்த கந்தசாமி என்பவர் தினமும் விளக்கேற்றி வந்தார். அவ்வேளைகளில் அவர் விளக்கேற்ற வந்தால் அங்கு சில வேளைகளில் சூலம் இருக்காது, அந்த வளவின் மூலையிலிருந்த புளிய மரத்தில் தொங்க விடப்பட்டிருக்கும் அல்லது ஆடு மாடுகளின் கயிற்றுடன் சுற்றி வேறு இடங்களில் இருக்கும் என்று கூறுவார். அந்த சூலம் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அயலிலுள்ள தங்கமுத்து என்பவரின் கனவில், தான் தனது சகோதரியின் வீட்டிற்குச் செல்லும் போது பூவரச மரத்தின் கீழ் ஒருவர் அழுது கொண்டிருந்ததையும் தான் அவரை ஏன் அழுகின்றாய் எனக் கேட்டதற்கு தான் மேற்கு முகமாக இருப்பதால் மக்கள் தன்னைப் புறக்கணிக்கிறார்கள் என்றும் தான் மக்களைப் பார்க்க முடியாதுள்ளது; தன்னைக் கிழக்கு முகமாக திருப்பி வைக்கும் படி கூறினாராம். அது தன்னால் முடியாது என்றும் தனது ஒன்று விட்ட மருமகளிடம் ( பவளக்கொடி ) கூறினால் அவள் நினைத்தால் செய்வாள் என்று கூறி விடிந்ததும் பவளக்கொடியிடம் கனவைப் பற்றிக் கூறிய போது அவவும் தங்களுக்கும் அது விருப்பம் தான்; அதற்கான விதிமுறை தெரிந்த ஒருவரை வைரவர் காட்டித் தர வேண்டும் எனக் கூறி வணங்கினார்.

சிறிது காலம் சென்றது. வைரவரின் காணிக்குச் சொந்தமான சின்னராசா என்பவர் கோண்டாவிலில் வசிப்பவர். தனது வீட்டில் இத் தெய்வத்தை ஆதரிப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு வைரவர் உருக்கொண்டு அவ்வூர் மக்களுக்கு நோய் தீர்த்து வருவதாகவும் குணமடைந்த மக்களுடன் இங்கு வந்து உருக் கொண்ட வேளையில் ஆலயம் கட்டுவது பற்றி கேட்ட போது அவரே நிலமெடுத்து பூவரச மரத்தையும் தறிக்கலாம் என்று தானே முதலில் கலையுடன் கோடாரி போட்டு வெட்டினார். தொடர்ந்து கட்டுமான வேலைகள் ஆரம்பமாகி அயலவர்களின் உதவியுடனும் பவளக்கொடி குடும்பத்தினரால் 1967ம் ஆண்டு ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தன்று எம் பெருமானுக்கு முதல் முதல் கும்பாவிஷேகம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 5ம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த பவளக்கொடியின் மகன் இறங்கநாதன் சிவதீட்சை பெற்று வைரவப் பெருமானுக்கு திருமுறை பாராயணத்துடன் பூஜை செய்து வந்தார். சில காலத்தின் பின் வைரவப் பெருமானுக்கென வைத்தியநாத சர்மா என்பவரை பூசகராக நியமித்து பூஜை ஒழுங்குகள் முறையாகச் செய்யப் பட்டு வந்தன. வருடா வருடம் தைப்பொங்கல், வருடப் பிறப்பு, ஆடிப்பிறப்பு, திருவெம்பாவை போன்ற விசேட தினங் களில் பொங்கல் படையலுடன் ஆவணி மூல நட்சத்திரத்தில் எம்பெருமானுக்கு விஷேட அபிஷேகம் பூசைகள் அன்ன தானம் ஆகியன முறைப்படி நடைபெற்று வந்தன.

இக்கால கட்டங்களில் வைரவப் பெருமானின் அருளினால் அயலிலுள்ள இளைஞர்கள் வீட்டிற்கு வீடு வெளிநாட்டு வேலை வாய்ப்பினைப பெற்று வெளிநாடு களுக்குச் சென்று தொழிலாற்றி பணம் பொருளீட்டி குடும்பங்கள் சிறப்புற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. அத் துடன் பெண்பிள்ளைகளும் வெளிநாட்டு வரன்கள் கிடைக் கப் பெற்று சிறப்புற வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பின்புறத்தில் ஒரு ஆலங்கன்றை வைத்து சுற்றிவர பூவரசங்கதியால்கள் நட்டு கூடுகட்டிய போது அவைகளில் மூன்று கதியால்கள் கிளைகள் விட்டு வளர்ந்து பெருவிருட்சங்களாகின. தற்போது அம்மரங்களைப் பற்றி திருவுளச்சீட்டு எழுதி அனுமதி பெற்று அப்பூவரச மரங்கள் அகற்றப்பட்டு அவ்விடத்திலேயே மூலஸ்தானம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலய பூசகர் வயது சென்று நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அவரது மருமகன் திரு. செல்வக்குமார் ஐயா அவர்கள் பூஜை செய்து வந்தார். அவரும் தனக்கு நேரம் போதாதெனக் கூறி வைரவப் பெருமானின் பூஜையைப் பொறுப்பேற்க மறுத்துவிட்டார். பின் நாம் மிகவும் வேதனைப் பட்டிருந்த வேளையில் அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் பூசகராக இருந்த சுப்பிரமணியக் குருக்கள் ஐயா ஆலய எசமான் பேராசிரியர் திரு. க. சிற்றம்பலம் அவர்களின் அனுமதியுடன் வைரவப் பெருமான் ஆலய பூசகராகப் பொறுப்பேற்றார்.

இவ்வேளையில் பவளக்கொடி அம்மாவின் மரணம் நிகழ்ந்து ஓராண்டு பூர்த்தியான பின் அவரது பிள்ளைகள் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ய ஆலய காணி உரிமையாளரின் அனுமதியுடன் முன் வந்தனர். அதன்படி சிவஸ்ரீ. தி. கெங்காதரக் குருக்களால் ஆலய நிர்ணயம் செய்யப்பட்டு சிவஸ்ரீ. தி. சர்வேஸ்வரக் குருக்களால் (05.09.2014) ஆவணி மாதம் 20ம் நாள் வெள்ளிக்கிழமை பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

கடவுள் என்றாலும் நல்லதை அடைய சில சமயங்களில் எதிர்நீச்சல் போட வேண்டும் என்ற நியதியோ என்னவோ ஒரு வருடத்திற்குள் கும்பாபிஷேகம் நடாத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற தீவிரத்துடன் மிகவும் வேகமாக வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து கும்பாபிஷேக நாளும் நிர்ண யிக்கப்பட்டு விளம்பரப் பத்திரம் அடித்து ஆரவாரப்பட் டிருந்த வேளையில் வைரவப் பெருமானுக்கும் எதிர்நீச்சல் போட வேண்டுமென்ற நியதி உண்டானது. ஆலயத்தின் காணிக்குச் சொந்தக்காரரால் சில குழப்பங்கள் ஏற்பட்டன. துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன பக்த ரட்சகன் அல்லவா எம் பெருமான். ஆணவத்தை அடக்கி, துஷ்டரை நிக்கிரகம் செய்ய எடுத்த மூர்த்தமே வைரவ மூர்த்தம். ஆனபடியால் எம் பெருமான் தனக்கே உரிய பாணியில் குழப்பங்களை வென் றெடுத்து உலகப் பிரசித்தி பெற்றவரானார். பின் 16.09.2015 புதன்கிழமை எம்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் மிக விமர்சையாக நடந்தேறியது.

வைரவப் பெருமான் காவல்த் தெய்வம். சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி, தை மாதத்தின் செவ்வாய்க்கிழமைகள் வைரவப் பெருமானுக்குரிய விரத நாட்களாகும். எனவே சகல விதத்திலும் சிவப்பொலிவுடன் காவல் செய்து எல்லோருக் கும் அருள் பாலிக்கும் சிவசக்தியாகிய வைரவப் பெருமானை அவருக்குரிய விரத நாட்களில் விரத அனுட்டானங்களுடன் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

பரமனை மதித்திடாப் பங்கை ஆசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவன்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்.

**தொகுப்பு :-**
**சின்னப்பு குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

# அராலி
# விஸ்வகுல ஞான வைரவரின் திருவூஞ்சல் பாமாலை

**காப்பு**

*சீர் கொழிக்கும் அராலிப் பதியில் வாழும்*
*பார் போற்றும் விஸ்வகுல மத்தியிலே - வீற்றிருக்கும்*
*பேராளன் ஞான வைரவரின் திருவூஞ்சல் தனைப் பாட*
*வீர் கொண்ட வேலன் சோதரனே காப்பு.*

*சீர் பூத்த சதுர் வேதம் தூண்களாக*
*சிவாகமங்கள் அனைத்தும் விட்டமாக*
*பார் மலியும் கலைஞானம் கயிறதாக*
*பரந்த திரு பூமகளே பலகையாக*
*கார் மேகம் கவித்த திரு பந்தலூடே*
*கச்சிதமாய் அமைத்த திரு வூஞ்சல் தன்னில்*
*பேரான அராலிப் பதியில் வாழும் விஸ்வகுல*
*கற்பகமே அற்புதமாய் ஆடீர் ஊஞ்சல்.*

*தேவ லோக இந்திரனும் கவிகை தாங்க*
*சூரிய சந்திரர் சா மரை வீச*
*மாதவனும் மலரவனும் வடந் தொட்டாட்ட*
*திருமகளும் கலைமகளும் மலர் தூவி மகிழ*
*பாவ வினை அகற்ற திரு ஊஞ்சல் மீது*
*பக்குவமாய் எழுந்தருளி அருள் புரியும்*
*காவலனாம் அராலி மேவும் விஸ்வ குல*
*வித்தகனே விற்பனனே ஆடீர் ஊஞ்சல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீ ரேறு பங்கயன் கைத் தாளம் போட
மாதவனும் மத்தளத்தைச் சேர்ந்து வாசிக்க
ஏ ரேறு கந்தருவர் சுருதி கூட்ட
இதமாக நாரதர் பண்ணிசை பாட
வா ரேறு முலை அரம்பை மாதர் ஆட
கஜமுகனும் அறுமுகனும் மகிழ்ந்து நோக்க
பேரேறு அராலிப் பதி மேவும் விஸ்வகுல
ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்

கங்கை வாழ் சடையோனும் ஆட ஆட
பங்கினளாம் உமையவளும் ஆட ஆட
பொங்கு தமிழ் புரவலனும் ஆட ஆட
தெய்வானை குறமகளும் ஆட ஆட
சங்கு சக்கரனும் சதுர் முகனும் ஆட
செல்வதியும் பாமகளும் சேர்ந்தே ஆட
மங்காத புகழ் அராலி மேவும் விஸ்வகுல
ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்

செஞ்சடையும் திருமுடியும் ஆட ஆட
சக்தியாம் காளியும் சேர்ந்தே ஆட
செம்பவள மேனியின் மேல் ஆரம் ஆட
திருவரையில் சுற்றிய அரவமும் ஆட
விஞ்சு மொளிர்க் கரம் நான்கும் படையுமாட
பொங்கு மொளிர் திரிசூலம் ஆட ஆட
பஞ்ச ரிஷி கோத்திரமும் ஆட விஸ்வகுல
ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் ஆட நிலம் ஆட ஆகாயமும் ஆட
காற்றாட அங்கை அனலும் ஆட
ஆர் பெரியார் என்றமர் செய்த
அரி அயன் முன் நீ தோன்ற அயன்கழ
பேர் பிரமன் ஒரு தலை கிள்ளி அகந்தை நீக்கி
அறம் பெருக அன்புடனே கருணை செய்தாய்
ஏர் சிறக்கும் அராலிப்பதி மேவும் விஸ்வகுல
அருட் சுடரே ஆரமுதே ஆடீர் ஊஞ்சல்

செறிந்த பட்டுடையினரே ஆடீர் ஊஞ்சல்
திரிசூலம் கொண்டவரே ஆடீர் ஊஞ்சல்
திரிந்த செஞ்சடையினரே ஆடீர் ஊஞ்சல்
நீறணிந்த மேனியரே ஆடீர் ஊஞ்சல்
விரித்த குழல் அம்மையுடன் ஆடீர் ஊஞ்சல்
விளங்கு மணி மார்பினனே ஆடீர் ஊஞ்சல்
அருட் சுடரே அராலிப்பதி மேவும் விஸ்வகுல
ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்

சூலமே காவலாய் கொண்டவரே ஆடீர் ஊஞ்சல்
ஊழ்வினை அறுப்பவரே ஆடீர் ஊஞ்சல்
ஞாலத்தைக் காப்பவரே ஆடீர் ஊஞ்சல்
வல்வினைகள் தீர்ப்பவரே ஆடீர் ஊஞ்சல்
ஞாளி வலம் வருபவரே ஆடீர் ஊஞ்சல்
நாவலரும் பாவலரும் போற்றுபவரே ஆடீர் ஊஞ்சல்
ஞானம் மிகு அராலி மேவும் விஸ்வகுல
ஞமலி வாகனரே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரீக்கை

கரம் மேவிய, சூலம் கொண்டாய் எச்சரீக்கை
கரம் நான் குடைய பெரியாய் எச்சரீக்கை
ஞாளி மேலூர்ந்து வருபவரே எச்சரீக்கை
ஞாலம் வலம் வந்து அருள்பவரே எச்சரீக்கை
அராலிப் பதி மேவிய நாதனே எச்சரீக்கை
ஈரமில்லாதவர்க்கும் ஈய்பவனே எச்சரீக்கை
காவலனாய் வந்தருளும் கற்பகமே எச்சரீக்கை
காத்தருளும் விஸ்வகுல ஞான வைரவரே எச்சரீக்கை

## பராக்கு

அருள் அள்ளித் தருபவரே இறைவா பராக்கு
ஆனந்த பைரவரே ஆதீ பராக்கு
மிடி யாவும் தீர்ப்பவரே தேவா பராக்கு
ஈடில்லா அருட் சுடரே ஐயா பராக்கு
பிரம்மாவின் தலை ஓடித்த வீரா பராக்கு
கரம் நான்குடையவரே வடுகா பராக்கு
நிர்மலரூபனே நிமலா பராக்கு
நிர்வாண கோல முடையவரே பராக்கு
திருவோங்கும் அராலி தன்னில் மேவும்
திகழ் ஞான வைரவரே விஸ்வகுல தேவே பராக்கு.

## வாழ்த்து

அலை பூண்ட திரிசடையான் வாழி வாழி
    அருகிருக்கும் பார்வதி அம்மையும் வாழி
தலை யானை கொண்ட ஐங்கரன் வாழி
    தமிழ் காக்கும் அரசன் குமரேசன் வாழி
அலை கடலில் பள்ளி கொண்ட அரியும் வாழி
    அண்ட மெல்லாம் படைத்த அயனும் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை கொண்ட வேதமும் வேதியரும் வாழி
பண்பான பக்தர்களும் பசுக்களும் வாழி
மலையாக அருள் புரியும் அருட் சுடர் வாழி
மங்காத புகழ் கொண்ட மாந்தர்களும் வாழி
குலையாக நெற்கதிர்கள் குலங்கும் அராலி
குன்றாத செல்வமும் புகழும் வாழி
நிலையாக வீற்றிருக்கும் வடுக தேவர் வாழி
நிறை மங்கை காளி தேவியும் வாழி
கலைஞானம் கொண்ட விஸ்வகுலம் வாழி
கற்பகமாம் ஞான வைரவரும் வாழி வாழி

## மங்களம்

ஸ்ரீ வைரவ நாதனுக்கு ஜெய மங்களம் என்றும்
திவ்ய குண சீலனுக்கு சுப மங்களம்
(ஸ்ரீ வைரவ)

அகிலாண்ட நாதனுக்கு ஆதிபரமேஸ்வரிக்கும்
ஆதி சிவன் மைந்தனுக்கு அழகராம் முருகனுக்கும்
(ஸ்ரீ வைரவ)

பார் முழுதும் காத்தருளும் பார்த்த சாரதிக்கும்
பண்பாக படைத்தருளும் பங்கய நாதனுக்கும்
(ஸ்ரீ வைரவ)

நிர்மல ராசனுக்கு நிமலனுக்கு மங்களம்
நிர்வாண ரூபனுக்கு நித்தியர்க்கு மங்களம்
விண்ணாளும் தேவனுக்கு வீரனுக்கு மங்களம்
விஸ்வ குல நாதனுக்கு வேந்தனுக்கு மங்களம்
(ஸ்ரீ வைரவ)


மங்களம் சுப மங்களம்

- சுபம் -

**இயற்றியவர் :**
**திருமுறைநெறிச்செல்வர் திருமதி.பொன்திருமலர் சிவானந்தம் B.A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைரவப் பெருமானுக்கு தீபாராதனையின்போது
சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக பிரதிஸ்டை செய்யப்பட்ட உற்சவமூர்த்தி
வைரவப் பெருமான் திருவீதி உலா புறப்படும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய கர்ப்ப கிரகத்தின் பின்புறத் தோற்றம்



ஆலய பின்புறத் தோற்றம்



M.B.S. பிறிண்டேர்ஸ் அராலி. 0774080558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org